**பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள்,**

**சென்னை 6**

**ந.க.எண் 023758/பிடி2/இ1/2024, நாள் .12.2024.**

**பொருள் :** பள்ளிக் கல்வி - 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் உயர் கல்விக்கு செல்ல ஏதுவாக மாணவர்களை போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்துதல் - விருப்பம் தெரிவித்த ஆசிரியர்கள் மற்றும் உயர் தொழில் நுட்ப ஆய்வக நிர்வாகிகளுக்கு – அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாதிரிப் பள்ளிகளில் ஒரு நாள் புத்தாக்க பயிற்சி 03.01.2025 **(வெள்ளி)** அன்று நடைபெறுதல் – முதன்மைக்கல்வி அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – சார்ந்து.

**பார்வை :**

1. தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலரின் கடிதம் நக. எண்.680/எல்1/சிஜி-70/2024, நாள்.14.09.2024
2. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை 6 ந.க.எண் 023758/பிடி2/இ1/2024, நாள் 14.10.2024, 17.10.2024 24.10.2024 ,11.11.2024, 13.11.2024 , 19.11.2024 மற்றும் 27.11.2024

.....

**பார்வை** 2 இல் காணும் கடிதங்களின் படி 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் உயர்கல்விக்கு செல்ல ஏதுவாக பள்ளிக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போட்டித் தேர்வுகள் எழுத விருப்பம் தெரிவித்த மாணவர்களை போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்துவதற்கு, இரண்டு கட்டமாக நடைப்பெற்ற பயிற்சிகளில், பயிற்சி பெற்று 17 மாவட்டங்களில் உள்ள 162 வட்டாரங்களில் உள்ள ஆசிரியர்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் (Lab Assistants & Administrative cum Instructors) வட்டார அளவில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, மூன்றாம் கட்டமாக மீதமுள்ள 21 மாவட்டங்களில் உள்ள 240 வட்டாரங்களில் உள்ள ஆசிரியர்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் (Lab Assistants & Administrative cum Instructors) மாணவர்களுக்கு உயர் கல்விக்கு வழிகாட்டுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

விருப்பம் தெரிவித்துள்ள ஆசிரியர்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் (Lab Assistants & Administrative cum Instructors) வருகின்ற 03 .01 .2025 அன்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள **மாதிரிப் பள்ளிகளில்** ஒரு நாள் புத்தாக்க பயிற்சி **காலை 10**

**மணி முதல் மாலை 5 மணி வரை** நடைபெறவிருக்கின்றது (**இணைப்பு 1- இல் விருப்பம் தெரிவித்த ஆசிரியர்கள் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன).**

21 மாவட்டங்களிலிருந்து உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதி இருக்கக்கூடிய 239 மேல்நிலைப் பள்ளிகள் வட்டார உயர்கல்வி வழிகாட்டி மையங்களாகவும், இந்நிகழ்வை ஒருங்கிணைக்க வட்டார ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் (**இணைப்பு 2-இல் வழங்கப்பட்டுள்ளன**). தன் விருப்பத்தின் பெயரில் இத்திட்டத்தில் பங்கேற்று, ஜனவரி 3 ஆம் தேதி பயிற்சி பெறவிருக்கின்ற அனைத்து ஆசிரியர்களும், ஆய்வக உதவியாளர்கள் (Lab Assistants) மற்றும் ஆய்வக நிர்வாகிகள் (Administrative cum Instructors) சனிக்கிழமைகளில் நடைபெற இருக்கின்ற உயர்கல்வி வழிகாட்டி மையங்களுக்குச் சென்று, விருப்பத்தின் அடிப்படையில் வருகின்ற மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்குதல் வேண்டும். விடுமுறை நாட்களில் பணி புரிவதற்காக சார்ந்த ஆசிரியர்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள்(Lab Assistants) மற்றும் நிர்வாகிகளுக்கு (Administrative cum Instructors) ஈடு செய்யும் விடுப்பு வழங்கப்படும்.

**இணைப்பு – 3 இல் வழங்கப்பட்டுள்ள** 239 வட்டார உயர்கல்வி வழிகாட்டி மையங்களில் இருக்கின்ற உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் (Lab Assistants & Administrators cum Instructors) பயிற்சியில் பங்கேற்க வேண்டும்.

**பயிற்சியில் பங்கேற்கும் உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள்/ நிர்வாகிகளுக்கு பயணப்படி ரூபாய் 200 மற்றும் ஆசிரியர்களுக்கு பயணப்படி (Actuals TA) ஒருங்கிணைந்த பள்ளி கல்வியிலிருந்து வழங்க அறிவுறுத்தப் படுகிறார்கள்.**

03 .01. 2025 (**வெள்ளி**) அன்று நடைபெறவுள்ள பயிற்சியில் விருப்பம் தெரிவித்த ஆசிரியர்கள் உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்வதினை உறுதி செய்திடுமாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்புகளின் விவரங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 | விருப்பம் தெரிவித்துள்ள ஆசிரியர்களின் விவரங்கள் மற்றும் அவர்கள் பணிபுரியும் பள்ளிகளின் விவரங்கள் | |
| 2 | 239 வட்டார உயர்கல்வி வழிகாட்டி மையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பள்ளிகள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியர்களின் விவரங்கள் | |

| | | |
|---|---|---|
| 3 | 239 வட்டார உயர்கல்வி வழிகாட்டி மையங்களில் இருக்கின்ற உயர் தொழில் நுட்ப ஆய்வக உதவியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் (Lab Assistants & Administrative cum Instructors | |
| 4 | 21 மாவட்டங்களில் உள்ள மாதிரிப் பள்ளி உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களின் விவரங்கள் மற்றும் மாதிரிப் பள்ளிகள் முகவரி | |

இணை இயக்குநர்
( தொழிற்கல்வி )

**பெறுநர்**

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தென்காசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர்)

**நகல்**

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை-6.- அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.